IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 46/2015

Deposition of Witness : DW 1

Name : விஜயராகவன் (வயது – 38)

Father's Name /W/o : த/பெ குருசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : வேப்பம்பட்டு

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 06.11.2025.

## குறுக்கு விசாரணை

1. ரயில்வே துறையில் என்ன பதவியில் உள்ளேன் என்றால் OFFICE SUPERITENDENT. எத்தனை ஆண்டுகளாக மேற்படி பதவியில் உள்ளேன் என்றால் 12 வருடங்களாக உள்ளேன். வழக்கு சம்பந்தமான கோப்புகளை எப்போது பார்த்தேன் என்றால் 2023 ஆண்டிலிருந்து பார்த்து வருகிறேன். 2023 ஆண்டு முதல் தற்போது வரை உள்ள ஆவணங்கள் மட்டும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2023 ஆண்டிற்கு முன்பு இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. நாகப்பன் ரயில்வேயில் எந்த ஆண்டில் பணியில் சேர்ந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நாகப்பனின் SERVICE RECORD இல் முதல் வாதி ஜகஜோதி மனைவி என்றும் மகன்கள் வினோத்குமார் மற்றும் ராம்குமார் வாரிசுகளாகவும் குறிப்பிட்டுள்ளது என்றால் குடும்ப உறுப்பினராக குறிப்பிட்டுள்ளது. நாகப்பனின் பணி பதிவேட்டில் ஜகஜோதி தான் நாகப்பனின்

மனைவி என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் முனியம்மாள் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. ரயில்வேயில் WELFARE OFFICER தான் பணி செய்பவரின் குடும்ப உறுப்னர்களை விசாரிப்பார் என்றால் இல்லை. பணியாளர் தான் SELF DECLARATION மூலம் உறவினர்களை தெரிவிப்பார். பணியாளர்களின் குடும்ப உறுப்பினர் சம்பந்தமாக பிரச்சினை வந்தால் யார் விசாரிப்பார்கள் என்றால் 2 ஆம் பிரதிவாதி விசாரணை செய்வார். முனியம்மாள் நான் தான் முதல் மனைவி என்றும் ஜகஜோதி மனைவி இல்லை என்றும் தெரிவித்தபோது 2 ஆம் பிரதிவாதி விசாரணை நடத்தினாரா என்றால் இல்லை. ஏனென்றால் 2005 ஆம் ஆண்டில் நாகப்பன் உயிருடன் இருந்தார். அவரை விசாரணை செய்த போது 1975 இல் முனியம்மாளை திருமணம் செய்ததாக சொன்னார்.

4. முனியம்மாள் தான் மனைவி என்று நாகப்பன் ஒப்புக்கொண்டதன் விசாரணை மற்றும் அவர் ஒப்புக்கொண்ட அறிக்கையை நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முனியம்மாள் தான் நாகப்பனின் மனைவி என்று தெரிவிக்கும்போது இரண்டு மனைவி என்பதால் நீதிமன்றத்தை அனுக அறிக்கை அளிக்கப்பட்டதா என்றால் இல்லை ஏனென்றால் நாகப்பன் உயிருடன் இருந்தபோதே முனியம்மாளை திருமணம் செய்து கொண்டதை ஒப்புக்கொண்டார்.

5. வழக்கு எண்.120/2005 தீர்ப்பின் படி 1 ஆம் பிரதிவாதி இறந்த நாகப்பனின் மனைவி என்று தீர்ப்பு காண்பித்தார்கள் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் 1 ஆம் வாதியை சேர்க்காமல் மேற்படி தீர்ப்பை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். நாகப்பன் 2012 ஆம் ஆண்டில் இறக்கும்போது மேற்படி அசல் வழக்கு எண்.120/2005 அவரின் வாரிசுகளை சேர்த்தார்களா என்றால் இல்லை. ரயில்வே துறையில் இரண்டு மனைவிகள் என்ற பிரச்சினை வரும்போது எங்கள் துறையில் சட்ட குழு மூலம் முடிவு செய்வீர்களா என்றால் இல்லை. நீதிமன்றத்தை அணுககோரி அறிவுறுத்துவோம்.

6. இந்த வழக்கில் நாகப்பனின் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் நீதிமன்றதில் கோரி தீர்ப்பை கொண்டுவர அறிவுறுத்தினோமா என்றால் அறிவுறுத்தினோம். மேற்படி அறிவுறுத்தினோம் என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எம்.சி. எண்.01/1993 மற்றும் அசல் வழக்கு எண்.120/2005 படி தான் ஓய்வு ஊதியம் 1 ஆம் பிரதிவாதிக்கு வழங்கினோம் என்று பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி 2015 ஆம் ஆண்டில் ஓய்வூதியத்தை கொடுத்தால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2012 ஆம் ஆண்டிலிருந்தே 1 ஆம் பிரதிவாதிக்கு ஓய்வூதியம் வழங்க தொடங்கினோம். அசல் வழக்கு எண்.120/2005 நிலுவையில் உள்ள போது எப்படி ஓய்வூதியத்தை 2012 ஆம் வழங்கினோம் என்றால் மேற்படி வழக்கில் பணிப்பலன்கள் கோரி தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது அதனால் வழங்கினோம். மேற்படி வழக்கில் 1 ஆம் பிரதிவாதிதான் நாகப்பனின் மனைவி என்றும் பணிப்பலன்களை அவருக்கு வழங்க வேண்டும் என்றும் வழக்கு நிலுவையில் உள்ள போது எப்படி 2012 ஆம் ஆண்டில் 1 ஆம் பிரதிவாதிக்கு ஓய்வூதியம் கொடுத்தோம் என்றால் நாகப்பன் 1 ஆம் பிரதிவாதிதான் அவர் மனைவி என்று ஒப்புக் கொண்டார் அதனால் கொடுத்தோம்.

8. எந்த தேதி வரை ஜகஜோதி மற்றும் அவர் பிள்ளைகள் நாகப்பனின் குடும்ப உறுப்பினர் என்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2005 ஆம் ஆண்டுவரை உள்ளது. நாகப்பன் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதிதான் வாரிசுதாரர் என்று உத்தரவு அளிக்கப்பட்டதா என்றாலும் அந்த உத்தரவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா எனறால் உத்தரவு எதுவும் போடவில்லை. எந்த தேதியில் ஜகஜோதி மற்றும் பிள்ளைகள் நாகப்பனின் குடும்ப உறுப்பினர் இல்லை என்று பணிப்பதிவேட்டில் இருந்த அவர்கள் பெயரை எடுத்தோம் என்றால் தேதி ஞாபகமில்லை.

9. நாகப்பனை விசாரணை செய்து முனியம்மாள் தான் மனைவி என்று உத்தரவு போட்டதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை நிலை தெரியவரும் என்றால் மேற்படி ஆவணம் எங்களிடம் இல்லை. மேற்படி விசாரணையை நாங்கள் முழுமையாக செய்யவில்லை என்றாலும் அப்படி செய்திருந்தார் மேற்படி ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடும் என்றால் நாங்கள் முழுமையாக நாகப்பனிடம் விசாரித்தோம். நாகப்பனை விசாரரித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனவே நாகப்பனை விசாரணை செய்ததை நான் நேரடியாக பார்க்காததால் விசாரணையின் முடிவு எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும் நான் உத்தரவு நகலை பார்த்தேன்.

10. மேற்படி உத்தரவு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். எந்த வருடத்தில் விசாரணை தொடங்கியது மற்றும் முடிந்தது என்றால் தேதி தெரியவில்லை. நாகப்பன் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் 1 ஆம் பிரதிவாதி தான் மனைவி என்று உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் சாட்சி அளித்தேன் என்றாலும் மேற்படி உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனவே எனக்கு உத்தரவு பற்றி தெரியாது என்றால் நான் பார்த்தேன் அதனை தாக்கல் செய்துள்ளேன்.

11. மேற்படி உத்தரவை நான் பார்க்கவில்லை என்றாலும் மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை 1 ஆம் வாதி ஜகஜோதி தான் நாகப்பனின் மனைவி என்றாலும் அவர்களின் பிள்ளைகள் உண்மையான வாரிசுகள் என்றாலும் எங்களின் ஆவணங்களின் அடிப்படையிலும் அவர் பெயர்தான் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் துறையில் பணியாளர் அளிக்கும் SELF DECLARATION படி தான் குடும்ப உறுப்பினர் யார் என்று பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். ஜகஜோதி தான் நாகப்பனின் மனைவி என்று அவர் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

12. நாகப்பன் இறக்கும் வரை ஜகஜோதி மற்றும் அவர்கள் பிள்ளைகள் தான் வாரிசு என்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை 2005 ஆம் ஆண்டு வரை தான் இருந்தது. 2005 முதல் 2012 வரையிலும் ஜகஜோதி மற்றும் அவர் பிள்ளைகள் வாரிசு இல்லை என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. முனியம்மாள் தான் நாகப்பனின் மனைவி என்பதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2023 ஆம் ஆண்டில் தான் நான் ரயில்வே சட்ட துறையில் சேர்ந்தேன் என்றாலும் 2005 முதல் இன்றைய தேதிவரை நடந்ததை ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

13. எனவே இன்றைய தேதிவரை முனியம்மாள் தான் நாகப்பனின் வாரிசு என்று ஆவணம், நீதிமன்ற உத்தரவு பெறவில்லை என்றாலும் எந்தவெரு ஆவணமும் பார்க்காமல் முனியம்மாளுக்கு 2012 ஆம் ஆண்டு ஓய்வுதியம் வழங்கப்பட்டது தவறு என்றால் சரியல்ல. நாகப்பனின் ஒப்புகையின் பெயரில் தர்ன வழங்கப்பட்டது. ஜகஜோதியம்மாள் 45 ஆண்டுகள் நாகப்பன் உடன் குடும்பம் நடத்தினார் என்றாலும் முனியம்மாள் 1 ஆண்டுகள் குடும்பம் நடத்தவில்லை என்றாலும் எனவே வாதிகளுக்கு தான் நாகப்பனின் ஓய்வுதியம் பெற முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

14. எம்.சி.01/1993 உத்தரவின் விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2005 இல் 1 ஆம் பிரதிவாதி அவர் தான் நாகப்பனின் மனைவி என்று புகார் அளித்த போது தெரியவந்தது. 2005 ஆம் ஆண்டுக்கு முன்பு ஜகஜோதி மனைவி இல்லை என்று 1 ஆம் பிரதிவாதி மனு அளித்தார்களா என்றால் இல்லை. எம்.சி.01/1993 உத்தரவு 12 ஆண்டுகளுக்கு பிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி உத்தரவு பார்த்தபிறகு ஜீவனாம்சம் பெறுவதற்கு நாகப்பனின் ஊதியத்தை அவரிடம் வழங்கினோமா என்றால் இல்லை.

15. ஜகஜோதி மற்றும் அவர் பிள்ளைகள் தான் 45 ஆண்டுகளாக நாகப்பனுடன் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றாலும் அவர் பெயர் தான் பணிப்பதிவேட்டில் இருந்தது என்றாலும் 2005 ஆம் ஆண்டில் 1 ஆம் பிரதிவாதி அளித்த புகாரை சரியாக விசாரணை செய்யாமல் 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு ஓய்வூதியம் வழங்கினோம் என்றால் சரியல்ல.